76

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஜ்ஞான சம்பந்த குருப்யோ நம:

திருப்போரூர்

ஸ்ரீ முருகக்கடவுளின்

# தியானப்பாமணி.

இஃது

சென்னை கீழ்ப்பாக்கம் மேட்டுவீதியின்கண் வசிக்கும்

ம-ா-ா-ஸ்ரீ செல்லப்ப பிள்ளையவர்களின்

குமாரவர்க்கத்துளொருவராகிய

ம-ா-ா-ஸ்ரீ செ. பொன்னப்ப பிள்ளை,

ஷையூர்

கோ. கோ. ஜெயராம் பிள்ளை

இவ்விருவர்கட் கேட்டுக்கொண்ட விருப்பத்திற்கிணங்க

சென்னை சேத்துப்பேடு,

ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாச மடாதிபதியாகிய

தேசிக சுவாமிகள்

அருட்கவி

கி. ஊ. பா. கங்காதர நாவலரவர்களால்

இயற்றப்பட்டுத் தமது

சென்னை சேத்துப்பேடு

ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சாதாரண ஹூ மாசி மீ 23உ கிருத்திகையன்று

ஷை சுவாமி சந்நிதியில் நாவலரவர்களால்

அரங்கேற்றஞ்செய்யப்பட்டது.

1911 ஹூ மார்ச்சு மீ 6உ

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞான சம்பந்த குருப்யோ நம:

திருப்போரூர்

ஸ்ரீ முருகக்கடவுளின்

# இயானப்பாமணி.

இஃது

சென்னை கீழ்ப்பாக்கம் மேட்டுவீதியின்கண் வசிக்கும்
ம-ா-ா-ஸ்ரீ செல்லப்ப பிள்ளை யவர்களின்
குமாரவர்க்கத்துளொருவராகிய
ம-ா-ா-ஸ்ரீ செ. பொன்னப்ப பிள்ளை,
௸யூர்
கோ. கோ. ஜெயராம் பிள்ளை
இவ்விருவர்கட் கேட்டுக்கொண்ட விருப்பத்திற்கிணங்க

சென்னை சேத்துப்பேடு,
ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாஸ மடாதிபதியாகிய
தேசிக சுவாமிகள்
அருட்கவி
கி. ஊ. பா. கங்காதர நாவல ரவர்களால்
இயற்றப்பட்டுத் தமது
சென்னை சேத்துப்பேடு
ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாஸ அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

சாதாரண ௵ மாசி ௴ 23௳ கிருத்திகையன்று
௸ சுவாமி சந்நிதியில் நாவலரவர்களால்
அரங்கேற்றஞ்செய்யப்பட்டது.

1911 ௵ மார்ச் ௴ 6

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞான சம்பந்த குருப்யோ நம:

திருப்போரூர்

ஸ்ரீ முருகக்கடவுளின்

# தியானப்பாமணி.

## விநாயகர் வணக்கம்.

எண்சீர் விருத்தம். பண் – நட்டராகம்.

மாமணியே மாலயனிந் திராதிருடி யரன்பர்
வணங்கவருந் தும்பிமுக வள்ளற் கணபதியே
தூமணியே பிரணவமே தொழுவார்வினைக் களையுஞ்
சுடர்க்கொழுந்தே கும்பமுனிக் கமண்டலத்தைக் கவிழ்த்த
நேமணியே நிரதிசயா னந்தமகத் துவனே
நிலவும் போரூர்முருகக் கடவுளினற் றியானப்
பாமணியே சொலநினதுக் கடைவிழிசாய்த் தருள்வாய்
பதுமக்கழற் சந்ததமு நமவேநம நமஸ்தே.

## நூல்.

## பஞ்சரத்தினம்.

பன்னிருசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.
பண் – நட்டபாஷை.

அரும்பொருளே யானந்த மானசயஞ் சோதியே
வண்டபகி ரண்டமியாவு
மாஹரவோஞ் சரஹண பவகுகசண் முகவென
வஞ்சலிச் செய்யும்பரமே
கருணைமணி விளக்கான கற்றைவார்ச் சடையனற்
கங்கைவேணியன் தற்பரன்
காலனை யுதைத்துமுனிப் பாலனைக் காத்தரவங்
கையின்மான் மழுவேந்தியப்

பெருமானின் விழியனலி லறுமுகம தாய்வந்தும்
பேசரிய மகிமைகுலவப்
பெட்டாருஞ் சத்திசடா தரியுமையின் பாலனே
பேசரி வண்ணஞ் சமர்ப்
பொருத சுரர்க்காலனே புனிதமறை மூலனே
புகழ்மன்னும் வடிவேலனே
புங்கவர்க டங்கும்பதி யெங்குநிறை கின்றமதி
போநூர் முருகக்கடவுளே. (க)

ஆகம மெனும்வேத மதனையறி யாததா
லயனுகுஞ் சதுர்முகவனை
யண்டர்முதற் றேவர்கள் வருந்தியுஞ் சிறைவைத்த
வாறுமுக மானதேவா
ஏகாதி பத்திய மளிப்பவா யடியார்க
ளீடேறக் கண்பார்த்தரு
ளீசனே வன்பர்மன வாசனே வுலாசனே
யிறைவனே சிகிவாகனு
தேகமாம் புன்புலான் பொய்க்குரம் பைக்குயென்
சிந்தையை யளித்துநொந்தேன்
சின்மயா னந்தனே தேவியர்க ளாம்வள்ளி
தெய்வானை மகிழ்லோலனே
போக யோகந்தருகும் புண்ணிய விசாலனே
புரந்தென்னை யாட்கொள்ளுவாய்ப்
புங்கவர்க டங்கும்பதி யெங்குநிறை கின்றமதி
போநூர் முருகக்கடவுளே. (உ)

ரணமெலாம் பரவு மானந்த சீலனே
வானந்தி யுமைபாலனே
அரியமால் மருகனே போகர்துய ரதைதீர்த்த
வப்பனே வொப்பிலானே
காரணங் காரிய மெனும்பகுதி யாவுக்குங்
கர்த்தனே நித்யபரனே
கருதரிய நினதுருவ மதனையடி யவர்காண
காலமெப் போதருள்வையோ?
பாரளந் தவனன் றடைந்தபாம் புருமாறி
பணிந்தகணபதி முன்னவா
பத்தர்க ளகத்தினி னடிக்கும் பரமானந்த
பண்ணவாப் புகலவொண்ணுப்

பூரண னந்தமே பொய்யிலா மெய்யன்பர்ப்
போற்றிடுஞ் சிவசண்முகா!
புங்கவர்க டங்கும்பதி யெங்குநிறை கின்றமதி
போரூர் முருகக்கடவுளே. (௩)

சத்துரு சங்காரனே சைதன்யனே பரம
சாய்சியமே சூட்சியமுடிவே
சத்துசித் தானந்த மானசுக லட்சணந்
தானிலகு மின்பவடிவே
நித்திய நிராதார நிர்மய நிராலம்ப
நிர்த்தொந்த நிர்விஷயமாய்
நிமலவற் புதஞான வமலதற்பரமோன
நிகரற்ற பத்திதியான
வித்தகர்க ணத்திதொழு மத்தனே கருணமலி
விமலனே கதிர்வேலனே
வேதவே தாந்தசித் தாந்தமுத்தி யிலிலகும்
விண்மணியே கண்ணிணொளியே
புத்தமுத மென்னவே மெய்யடிய ருண்டுமகிழ்
புகழ்பெற்ற காங்கேயனே
புங்கவர்க டங்கும்பதி யெங்குநிறை கின்றமதி
போரூர் முருகக்கடவுளே. (௪)

சின்மயா னந்தனே செக்கர் வேணியன்சுதா
திகழ்ஞான மணக்கந்தனே
திருதியென வந்தடைந் திடுமெடியர்த் துயர்நீக்கி
சேவடிப் பணிக்காளாக்கி
புன்மயலைப் போக்கியே யாண்டருள வேண்டிடும்
பொன்னப்பனின் றுதிக்குப்
புனிதமே யிதங்கியாண் டருட்புரித னினதுபரம்
பொதிகைமலை முனிதனக்கு
யின்பநிறை குருமூர்த்தி யாகவே விளங்கிடு
மீசனே குமரேசனே
யெல்லா முனக்குவெளி யானததி லுலடிமை
யென்சொல்ல வேண்டுவததோ?
பொன்னுட ரிங்நாட ரெங்நாட ரும்பணிய
புகழ்பெற்ற கார்த்திகேயா
புங்கவர்க டங்கும்பதி யெங்குநிறை கின்றமதி
போரூர் முருகக்கடவுளே. (௫)

## துவாதசமாலை.

### எண்சீர் வண்ணத்தாழிசை.

அருளா ளர்களின் மனம்விட் டகலா வருஞ்சோதி
அத்தா நித்தா பத்தர் களித்திடு மன்பாருந்
தெருளே பொருளே தேடற் கரிய சிவபோதா
சித்த மென்னோ யென்னோ யறிவேன் சிறியேனே
மருளா ளர்களின் வயமா யுழைத்தென் வாணாளை
மங்கும் படிவாய்த் ததுநின் மயமோ தயவாமோ?
பெருமா னரனார்க் குபதேசஞ் செய்தப் பெட்பாளா
பேசர்க் கரியப் போரூர் முருகப் பெருமானே. (௧)

அன்பே வன்பா லுதிக்கு மறிவே யானந்த
வரசே துரையே யடியார்க் குதவு மாண்டவனே
துன்பக் கடலா முததி தனிலே துணையின்றித்
தோன்று நிலையொன் றுணரா தலைந்தேன் சுகமாமோ?
இன்பக் கடலி லழுந்திக் கிடந்தா ரினிமேரு
மிறப்பாஞ் சனனந் தனையற் றனர்கா ணெளிதாமோ?
பின்மு னறியாப் பேதை யரையாட் பெம்மாணே
பெருமை மலிந்தப் போரூர் முருகப்பெருமானே (௨)

அரனே அரனார்க் கொருசொற் செவியி லறிவித்து
வதனாற் சசலா கமநேர் பிரணவமது யென்றப்
பரனே வரமே பணிந்தார்க் கருளும் பாக்கியமே
பண்ணே பண்ணார்த் தமிழே தமிழின் பயன்ஞான
கரனே கருணை மலியுங் கடலே கமழ் வாசக்
கந்தா கடம்பா கதிர்வேலவனே காத்தாள்வாய்
பிரமன் றனையே சிறைவைத் தவனே பிரியாதப்
பெத்தர்ப் பணிசெய்ப் போரூர் முருகப் பெருமானே. (௩)

எங்குந் திகழ்மங் களசண் முகனே யிறையோனே
யெந்தா யென்முன் வந்தாட் கொளுநா ளெந்நாளோ?
மங்கா வொளியே மயின்வாகனனே மகத்துவனே
மன்னுந் தவமே தவத்தின் பயனே வரநீடி
துங்க மறையோர் துதிப்பா ரருகிற் சுகபோதந்
துலங்க நிலைநின் றடைவார் நினது துணைதானே

பிங்காட் சனனூர்க் களிக்க வுகந்தப் பெரியோனே
பிரியாத் தவஞ்சூழ்ப் போநூர் முருகப் பெருமாளே. (ச)

கடையே னெளியே னெனயென் றனைநீ கைவிட்டாற்
காப்பார்த் துயரை மீட்பா ரெவரோ கருத்தனே
விடமுண் டுலகை யளித்த சிவனூர் விழியார்க்க
வேகுந்தணலா லுதித்த வுருவே விமலேசா
புடவித் தனின்மாய்கை கையிற விழிவைப் பொருந்தாமற்
புனிதக் கழலி னிழடந் திடினற் புகழாமே
பிடமா னதிற்பொன் னிடுவார் நிகரிப் பேய் நெஞ்சின்
பிடிவா தனைத் தீர்ப் போநூர் முருகப் பெருமாளே. (ரு)

மணியே வணியே பிறவா தருளு மருந்தாக
வந்தா தரிக்குஞ் சுந்தரப் பதத்தை மறவேனே
பணியே பணியின் பயனே பரமே பரிசாகப்
பத்தர்க் கருளைப் கருணை விழியால் பாலிப்போய்
திணிகொட் புயனே சிவசாம் பவியுமை செல்வ னெனத்
திகழு முருவே சிந்தா குலத்தைத் தீர்ப்போனே
பிணியாஞ் சனனக் கடலைக் கடக்கப் பெரிதாகும்
பேறுந்தவந்தா போநூர் முருகப் பெருமாளே. (சு)

அஞ்சாப் புலவேடுவர்க ளிடையி லகப்பட்டு
வந்தோ வடியேன் படுந்துன்பமதை யறியாயோ
தஞ்சங் கொடுத்துத் தமியேன் வினையைத் தடுப்பாரார்
சரஹணபவ குகனென் றுனையே சார்வேனே
வஞ்சங் கொளுசிந் தையர்ப்பா னெருங்கி வருந்தாது
வாவென் றழைத்து வரந்தந் திடிற்புவி வாழ்த்தாதோ
பிஞ்ஞக னெனும் வள்ளல்களித்துப் பிரியங்கொட்
பெம்மானே நலப் போநூர் முருகப் பெருமாளே. (எ)

கருணா கரனே கலையே கலையின் கண்ணனைக்
கருத்தே கருத்தி னிலையே நிலையி னிச்சயமே
அருணே தயமே வம்போ ருகபத மருளாயே
லடியார் களையே தொடரும் படிறுகட் பொடியாமோ?
பொருளே புகழே பொன்னே மணியே பூசுரர்கட்
போற்றுஞ் சிவசண் முகனே வோர்சொல் புகலாயோ?
பெரும்பே றடைவா ரெவரோ வவர்கட் பெரியோராய்ப்
பேசு நலங்கொட் போநூர் முருகப் பெருமாளே. (அ)

இணையென் பதிலா தெங்கு நிறைந்த யிறையாகி
யெண்ணு யெழுத்தா யெழுத்தி னுருவா யிருப்போனே
துணையுன் னைநே ருளரோ யிலகாண் டொழுவார்க
டெகடீர்ப் பவனே சிவசுப்ர மண்யச் சுயஞ் சோதி
புணையாய் வினையின் கடலை கடக்கப் பொருந்தா யேற்
புலையேன் நலமென் பதுணர்ந் துதவம் புரிவேனோ
பிணைப்பட் டடியேற் கிதங்கி யருள்வாய் பிரமாணர்ப்
பேசிக் களிக்கும் போரூர் முருகப் பெருமானே. (கு).

ஈசா தொழும்பர்கள் மனவாசனே சிவப் பிரகாச
யேகா யோகா போகா தியாகா யென யேத்தி
மாசற்ற மனத் துடன் வாழ்த்தி வணங்குவ ரன்பர்
மமைதை யுடையே னொருநே ருளமாய் மதிகொண்டு
யேசற் றநிலை யுணர்ந்தே துதிக்க யெழி டந்தா
ளெந்தாய்க் கருணை யுவந்தா ளெனவெஞ் ஞான்றும் புகழ்ப்
பேசற் கினியப் பதவி யுடையார்ப் பிறவாதார்ப்
பிறங்கும் நலஞ்சூழ் போரூர் முருகப் பெருமானே.

வள்ளி யுடன்றெய் வானை மகிழும் மணவாளா
வரமே பதமே தனைகம் பினர்க்கு வழங்காயோ
புள்ளி மயிலின் மிசை சாரிவரும் புகழோனே
பொறையு நிறைவாய் மையுளோர்ச் சந்ததம் போற்றுபவா
யெ[illegible] தனைநின் னருடந் தனையே லெடுத்த சடத்
தின்[illegible] லெனுமூழ் வினைமாய்ந் திடுமே யிது வுண்மை
பிள்ளைப் பிழையைப் பெற்றோர்ப் பொறுத்தாற் பிசகாமோ ?
பிழிதொன் றுளதோ போரூர் முருகப் பெருமானே. (கக)

அரவோம் சிவவோம் சரஹ ணபவ வபய மென
வன்பா மலர்ச்சூ டியமு தமுதுகண் ணீரார்க்கச்
சரணந் தனையே பணிவார்த் தொழும்பர்ச் சதுராளா
சகடை யுடையே னவைநே ரடையத் தரமாமோ
கிரண மெனவே வொளிர் சண் முகனே போன் னப்பன்
கேளி னருடன் ஜெய ராம் துதிக்குக் கிருபைச் செய்தாட்
பிரமச் சுகமே ததியாட் சரணம் பெரு மானே
பெரியோர் தவஞ்சூழ் போரூர் முருகப் பெருமானே. (கஉ)

## போற்றித் தேவாரம்.

அருமறைப் பொருளே ஞான வமலனே கார்த்தி கேயா
கருணையங் கடவுளே முக் கண்ணனுர் விழியிற் றோன்றித்
தெருண்மலி தேவர் கட்குஞ் சீர்முனி பத்த ருக்குந்
திருவருட் புரிந்தப் போரூர் சிவகுக நாதா போற்றி (க)

அரஹர முருகா போற்றி வறுமுகத் தேவா போற்றி.
பரசிவன் குமாரா போற்றி பன்னிரு புயனே போற்றி
சரஹண பவனே போற்றி சத்துரு சங்காரா போற்றி
வரமருட் புரிவாய்ப் போரூர் வள்ளலே போற்றி போற்றி. ()

வேதத்தின் முடிவே யின்ப விளைவே யானந்தம் மன்னுஞ்
சாதனைத் தனில் விளங்குஞ் சதுர்முரு கேசா போற்றி
ஆதவன் முனம் பனிபோ லடியவர் வினைக ளுன்றன்
பாதத்தி னருளாற் றீர்த்தாட் பரமனே போற்றி போற்றி. (ங.)

மன்னுமெய் வாழ்வே யும்பர் வணங்கிடுந் தேவே போற்றி
சின்மய வடிவே யெங்குந் திகழ்மகத் துவனே போற்றி
பொன்னப்ப னுடன் ஜெயராம் புகல்துதிக் கருட்செய்போற்றி
நன்மைக ளருளும் போரூர் நாயகா பூந்தாட் போற்றி. (ச)

—o—

## வாழி விருத்தம்.

துதிதிகழும் பிரணவ விநாயகன் திருவடியுந் தூய ஞான
சுத்தசிவ பெருமானின் கழலுமுமா தேவியுந் துலங்கு நன்மை
நிதிதிகழுங் குமரகுரு பரமசர ஹணமுருக நிமலன் றாளு
நிலவும் வள்ளி தெய்வயானையு மஞ்ஞை நவகணமு நீடி நாளு
மதிதிகழு முனிவர்களும் புறச்சமயந் தனைக்களைய வந்துதித்த
மஹிமையுடன் சிவசமய வளமோங்கு வித்தகுரு நால்வர் வாழி
பதிபுகழும்போரூர்தனை வந்தித்தோர் வெண்ணீறக்கம்பஜிக்குமன்பர்
பத்தியுடன் தியானப்பா மாலைபடித்தவர்கேட்டோர் பலுகிவாழி.

திருப்போரூர்
ஸ்ரீ முருகக்கடவுளின் தியானப்பாமணி
முற்றுப்பெற்றது.
திருச்சிற்றம்பலம்.